இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் -2022/2023

மட்டம் - 05 LLU5709/LLU3311 நிர்வாக சட்டம்

இறுதிப் பரீட்சை 2022 / 2023

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 20 மார்ச் 2024 நேரம்: மு.ப.9.30 - பி.ப.12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)

ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

01. நலன்புரி பயன் சபை ஆனது 2022 ஆம் ஆண்டின் செலனிய நலன்புரிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட அமைப்பு ஆகும். சட்டத்தின் கீழ் நலன்புரி பயன் செலுத்துகைகளைப் பெறுவதற்கு தகுதியான தெரிவு செய்யப்பட்ட நபர்களிற்கான நலன்புரி பயன்களை அங்கீகரிக்கும் அதிகாரத்தை இச்சபை கொண்டுள்ளது. இச்சட்டத்தின் உறுப்புரை 5 ஆனது சட்டத்தின் கீழ் நலன்புரி பயன்களைப் பெறுவதற்கு மாதம் 25,000/= ரூபாவிற்கு கீழ் வருவாயை ஈட்டும் எந்த நபரும் உரித்துடையவர் ஆவார் என்றுரைக்கிறது. மேலும் சட்டம் தெரிவிப்பதானது. நலன்புரி பயன் சபை ஆனது சட்டத்தின் கீழ் நிறுவப்பட தெரிவுக்குழுவிற்கு பெற்றுக் கொண்ட சகல விண்ணப்பங்களையும் அவற்றின் விண்ணப்பத்தாரிகளின் வருமானம், சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான சகல தகவல்களையும் விசாரிப்பதற்கு அனுப்பும். சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் நலன்புரி பயன் சபையானது தெரிவுக்குழுவிடம் இருந்து அறிக்கையைப் பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரமே அங்கீகரித்து வழங்க அதிகாரம் கொண்டுள்ளது. மேலும் சட்டத்தின் பிரிவு 8 தெரிவிப்பதானது நிபந்தனைக்கு அமையவும், தெரிவுக்குழுவின் கருத்துக்களிற்கு அமையவும், தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுரைக்கிறது. இப்பிரிவு மேலும் தெரிவிப்பதானது, நலன்புரி பயன் சபையின் தீர்மானம் ஆனது இறுதியானதும் முடிவானதும் ஆகும் என்பதாகும்.

நாமலி எனும் நான்கு பிள்ளைகளின் தாய், தன் வேலையிலிருந்து அண்மையில் விலகியுள்ளதுடன், நலன்புரி பயன் சபையிடம் இருந்து நலன்புரி பயன்களைப் பெறுவதற்கு ஒரு விண்ணப்பம் ஒன்றை அனுப்பினார். பின்னர் நாமலி பின்வருவனவற்றை அறிந்தாள்;

அ) நலன்புரி பயன் சபை ஆனது தெரிவுக்குழுவிடம் இருந்து அறிக்கை பெறாமல் அவளது விண்ணப்பத்தை நிராகரித்திருந்தது.

ஆ) குறித்துரைக்கப்பட்ட தெரிவு நிபந்தனையாக தேவைப்படுத்தப்படாத அவளது தொழலில் இருந்து விலகியதற்கான காரணங்களை உள்ளடக்க தவறியமைக்காக அவளது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது,

இ) நலன்புரிபயன் சபை ஆனது நகரின் பலசரக்கு கடையின் உரிமையாளரான பந்துல என்பவனின் விண்ணப்பத்தை குழுவிடமிருந்து அறிக்கையொன்றை பெறாமல் அங்கீகரித்தது.

சபையின் தீர்மானத்தை கேள்விக்குப்பட்படுத்த ஏதேனும் காரணிகள் அவளிற்கு காணப்படுகிறதா என நாமலி உமது அறிவுரையை நாடுகிறாள். நாமலிக்கு அறிவுறுத்துக.

உமது விடையை பொருத்தமான நிர்வாகச் சட்டக்கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்ட எடுத்துக்காட்டுக்கள் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

02. ஜோன் என்பவர் முற்போக்கு சுதந்திர கட்சியை (மு.சு.க) பிரதிநிதித்துவப்படுத்தும் சியானா நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். அண்மையில், கட்சிக்கூட்டம் ஒன்றின் போது, மு.சு.க வின் தலைவர், கட்சியின் அரசியலமைப்பிற்கு எதிரான சில நடவடிக்கைகளில் ஜோன் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். கட்சியின் செயல் குழு ஆனது 2024 ஜனவரி 12 அன்று விசாரணையொன்றை நடாத்துவதற்கு தீர்மானித்ததுடன், விசாரணைக்கு முந்தைய தினம் குற்றப்பத்திரிகையையும் அனுப்பியது. குற்றப்பத்திரிகை ஆனது சனாதிபதி தேர்தலிற்கு வேட்பாளாராக மு.சு.க வின் தலைவர் ரமின் முன்மொழியப்பட்டுள்ள போது, ஜோன் அப்போதைய சனாதிபதி மார்ஷலை சந்தித்து, அவ்விதிக்கு எதிர்வரும் தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்தியதாக குறிப்பிடப்பட்டது. ஜோன் விசாரணைக்குழுவிடம் இருந்து பின்வருவனவற்றை வேண்டினான்.

அ) தனது வழக்கிற்காக தயார் செய்வதற்கு போதுமான காலம் அவனிற்கு வழங்கப்படாமையை எடுத்துரைத்து விசாரணையை பிற்போடல்.

ஆ) சட்ட பிரதிநிதித்துவத்தை பெறுதல்

இ) சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தல்

எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட எந்த வேண்டுகோள்களையம் ஏற்பதற்கு குழு விரும்பவில்லை. செயற்குழுவின் முன்னர் ஜோன் தோன்றாமலே, அவர் கட்சியின் உறுப்புடைமையில் இருந்து நீக்கப்பட்டார்.

மு.சு.க வின் ஊடக பேச்சாளர், ஜோனின் நீக்கத்திற்கான உடனடிக் காரணமாக, அவர் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் மு.சு.க வின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் போதைவஸ்து கடத்தல் தொடர்பான வழக்குகளுடன் தொடர்புபட்டுள்ளனர் எனத் தெரிவித்தமையாகும், எனக் குறிப்பிட்டார். ஜோன், தனது சர்வதேச ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஊடக மாநாடு தொடர்பாக எந்த முறையீடும் தனக்கு தெரிவிக்கப்படவில்லை என முறையீட்டார்.

நிர்வாகச்சட்ட கோட்பாடுகளிற்கு அமைய கட்சியின் செயற்குழு விசாரணையை நடாத்தியதா என உமது அறிவுரையை பெறுவதற்கு ஜோன் நாடுகிறான்.

ஜோனிற்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

03. சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை (சு.பா.அ) ஆனது சுற்றாடல் ஒழுங்கு விதிகளை செயற்படுத்தவும் மாசு கட்டுப்பாட்டு தராதரங்களை பின்பற்றுவதை உறுதிப்படுத்தவும் செயற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாட்டின் பிரதான நகரில் அமைந்துள்ள ஒரு இரசாயன உற்பத்தி தொழிற்சாலை ஆனது மாசு வெளிப்படுத்தும் தராதரங்களை தொடர்ச்சியாக மீறியுள்ளதுடன், பொதுமக்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தி சுற்றாடலை மாசுபடுத்தியும் உள்ளது. அப்பகுதியின் குடியிருப்பு வாசிகள் தொழிற்சாலையில் இருந்து எண்ணெய் மற்றும் ஆபத்தான பொருட்கள் நேரடியாக அருகாமையிலுள்ள ஆற்றிற்குள் வெளியகற்றப்படுவதால் குடிநீர் மாசுற்று உள்ளதாகவும், படிவ எரிமசிதைவுகளை எரிக்கப்படுவதால் காற்றிற்குள் ஆபத்தான வாயு வெளியகற்றப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். “ டீம் கிறீன்” எனப்படும் சுற்றாடல் ஆர்வலர் குழுவும், குடியிருப்பு வாசிகளது குழுவொன்றும் சு.பா.அ இனை சுற்றாடல் ஒழுங்குவிதிகளை கடுமையாக செயற்படுத்துவதுடன், தொழிற்சாலைக்கு எதிராக அவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தொடர்ச்சியாக வேண்டுகின்றனர். வேண்டுகோள்கள் பல விடுக்கப்பட்டும் சு.பா.அ ஆனது தொழிற்சாலைக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை டீம் கிரீன் மற்றும் குடியிருப்பு வாசிகளின் குழு முதலானவை சு.பா.அ இற்கு எதிராக சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளனர்.

அ) டீம் கிறீன் உம்மிடம் சு. பா. அ இற்கெதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க இயலுமா என விசாரிக்கின்றது. அவர்களிற்கு அறிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

ஆ) இவ்வழக்கில் பாதிப்புற்றுள்ள தரப்பினர்களிற்கு நிவாரணம் ஒன்றை வழங்குவதற்கு நீதிமன்றம் கருத்திற் கொள்ளும் காரணிகளை ஆராய்க. உமது விடையை தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

04. அ) நய்டாவின் விமானப் போக்குவரத்து (ந.வி.போ) சட்டத்தின் பிரிவு 10 இன் பிரகாரம் விமானப் பணிப்பெண் ஒருவருக்கான ஓய்வு பெறும் வயது 35 வருடங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரிவு 11 தெரிவிப்பதானது, நிர்வாக இயக்குநரின் கருத்துப் பிரகாரம் இது விண்ணப்பதாரியின் மருத்துவ தகைமையிற்கமைய, 40 வயது வரை நீட்டிக்கப்படலாம் எனப்படுகிறது. ஒழுங்கு விதி மேலும் தெரிவிப்பதானது, இவ்வாறு நிர்வாக இயக்குநர் ந.வி.போ வின் சட்டத்தின் நிறுவப்பட்டுள்ள மருத்துவ சபையிடம் இருந்து ஒரு மருத்துவ அறிக்கையை பெற்ற மாத்திரமே நீட்டிக்கலாம் என அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சட்டம் தெரிவிப்பதானது, நிர்வாக இயக்குநரின் இத்தகு முடிவானது இறுதியானதும் முடிவுமானதும் ஆகும் என்பதுடன், இது எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படலாகாது என்கிறது.

சோனாலி எனும் 35 வயதுடைய விமான பணிப்பெண் ஒருவர் தனது சேவைக்கால நீட்டிப்பிற்காக விண்ணப்பம் ஒன்றை முன்வைத்தார். எவ்வாறாயினும் அவளது விண்ணப்பத்தை மருத்துவ சபையிடம் இருந்து ஒரு மருத்துவ அறிக்கையை பெறாமல் நிர்வாக இயக்குநர் நிராகரித்தார். அவரது தீர்மானத்திற்கான எவ்வித காரணங்களையும் அவர் வழங்கவில்லை.

நிர்வாக இயக்குநரின் தீர்மானத்தை நீதிமன்றம் ஒன்றில் கேள்விக்குட்படுத்த இயலுமா என சோனாலி உம்மிடம் ஆலோசிக்கிறாள். இலங்கையின் 1972 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பொருட்கோடல் சட்டத்தின் உறுப்புரைகள் நய்டாவின் பொருட்கோடற் சட்டத்தின் உறுப்புரைகளை ஒத்தன எனக் கருதுக.
சோனாலிக்கு அறிவுறுத்துக.

(12 புள்ளிகள்)

ஆ) நிர்வாக நடவடிக்கைகளின் நீதியியல் மீளாய்வை கட்டுப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தால் ஏற்கப்பட்டுள்ள முறைகளை ஆராய்க.

(08 புள்ளிகள்)

5. “சகல நியதிச்சட்ட அதிகாரங்களிற்கும் சட்ட மட்டுப்பாடுகளுண்டு; தற்றுணிபு பரந்ததா அல்லது குறுகியதா என்பதும் எங்கு சட்ட வரம்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுவுமே உண்மையான வினாவாகும் என்பதுடன், இத்தகு வினாக்களை வரையறுக்கும் பொறுப்புடமையானது நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தற்றுணிபுகள் என்பனவற்றை பொறுத்தளவில் நீதித்துறை அல்லது நிர்வாகத்துறை என்பனவற்றாலான எல்லை மீறல், அல்லது துஷ்பிரயோகம் முதலியவற்றை தடுத்து அரசியலமைப்பை காப்பது நீதித்துறையின் சிறப்பு பொறுப்புடைமை ஆகும். இக்கோட்பாடுகளிற்கான ஏதேனும் விதிவிலக்கு ஆனது தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துரைக்கப்பட வேண்டும்.”

*Premachandra vs. major Montague Jayawickrema and another, 1994 (2) Sri L. R 90.*

மேற்போந்த கூற்றின் கீழ் தற்றுணிபு அதிகாரத்தின் நீதித்துறை கட்டுப்பாட்டை நுணுக்கமாக ஆராய்க.

உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை ஆதாரப்படுத்தவும்.

(20 புள்ளிகள்)

6. 1990 ஆம் ஆண்டின் ஜிம்லண்ட தேயிலை தோட்டங்களிற்கான சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒரு அதிகார அமைப்பு ஜிம்லண்ட தேயிலை சபை ஆகும். இச்சட்டம் சிறிய அளவில் தேயிலை உற்பத்தியாளர்கள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தவும், அதிகாரங்களை வழங்குகிறது. சட்டத்தின் பிரிவு 8 இற்கமைய, கட்டணங்களை வசூலித்தல் மற்றும் தண்டப்பணத்தை விதித்தல் முதலானவை தொடர்பில் தனது அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு விடயத்திற்கான பொறுப்புடைய அமைச்சரின் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களிற்கு கீழ் அமைய வேண்டும். பிரிவு 10 மேலும் தெரிவிப்பதானது, சபையின் தீர்மானங்களுடன் திருப்தியடையாத ஏதேனும் தரப்பினர் தேயிலை சபையின் தீர்மானத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் மேன்முறையீட்டு சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். 2024 ஜனவரி 1 இலிருந்து செயற்படும் வண்ணம் பின்வரும் வழிகாட்டிகளை தேயிலை சபையின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

**(i)** ஜிம்லண்ட் தேயிலை சபையால் குறித்துரைக்கப்பட்ட தராதரங்களிற்மைய தேயிலையை பொதி செய்யாமைக்கு 50% தண்டப்பண அதிகரிப்பு

**(ii)** தேயிலை சபையின் தீர்மானத்தின் திகதியில் இருந்து பதினான்கு நாட்களிற்குள் ஏதேனும் முறையீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(iii)** ஹேர்பல் டீ, எனும் 50 வருட காலமாக பல்வேறு நாடுகளிற்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமை கம்பனி ஆனது, தேயிலை சபையின் வழிகாட்டிகளது வலிதுடைமையை கேள்விக்குட்படுத்த விரும்புகிறது.

கம்பனிக்கு அறிவுறுத்துக.

அ) உமது விடை பொருத்தமான நிர்வாகச்சட்ட கோட்பாடுகள் மட்டும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பனவற்றால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்

(10 புள்ளிகள்)

ஆ) கையளிக்கப்பட்ட சட்டவாக்கங்களின் (delegated legislation) நன்மை, தீமைகளையும் ஆராய்ந்து, செயல் விளைவுள்ள ஒரு நிர்வாகத்தை உறுதி செய்வதில் இதன் செயற்திறனையும் கணிக்குக.

(10 புள்ளிகள்)

7. "ஆணையீட்டு எழுத்தாணை, மற்றும் உறுதிகேள் எழுத்தாணை, தடையாணை ஆகிய சிறப்பு நிவாரணங்களையொட்டி விருத்தியுள்ள நுணுக்கமான மட்டுப்பாடுகள் ஆனவை நிர்வாகத்திற்கு எதிராக நிவாரணத்தை நாடுகின்றதற்கு விரும்பும் வாதிக்கான ஒரு பெரும் தடையை உருவாக்குகின்றன. இவற்றை பிரகடனப்படுத்தும் தீர்ப்பு ஒன்றிற்காக வழக்கை பயன்படும் வெறும் ஆயத்தப்பயன்பாடு மூலமாக பெருமளவு தவிர்க்கலாமென நாம் நம்புகிறோம்."

*G.J Borrie Advantage of Declaratory Judgement in Administrative Law*

மேற்போந்த கூற்றின் அடிப்படையில் சிறப்பு ஆணைகளிற்கு எதிரான பிரகடனப்படுத்தல் கட்டளைகளின் அனுகூலங்களை நுணுக்கமாக கணிக்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வரும் ஏதேனும் **இரண்டின் (02)** மீது சிறுகுறிப்புக்கள் எழுதுக.

அ. பாரபட்சத்திற்கு எதிரான கோட்பாடு

ஆ. ஆணைகளின் தற்றுணிபு பண்பு

இ. நீதியியல் அதிகாரத்தின் அரசியலமைப்பு அத்திவாரம்

(10x2 = 20 புள்ளிகள்)